ACT MAGISTRATES COURT

TAMIL

# வன்முறையிலிருந்து உங்களுக்குப் பாதுகாப்புத் தேவையா?

உடலியல் அல்லது பாலியல் வன்முறை அல்லது துஷ்பிரயோகம், அச்சுறுத்தல்கள், பின்தொடர்தல், துன்புறுத்தல், மிரட்டல், சொத்து சேதம் அல்லது இது போன்ற செயல்களிலிருந்து உங்களுக்குப் பாதுகாப்பு தேவையா?

அல்லது

உங்கள் குடும்பத்தில் யாராவது உங்களுடன் வன்முறைத்தனமாகவோ அல்லது தவறாகவோ நடந்து கொண்டுள்ளனரா? உடலியல் அல்லது பாலியல் துஷ்பிரயோகம் அல்லது வன்முறை, உணர்வுசார் அல்லது உளவியல் துஷ்பிரயோகம், பொருளாதாரத் துஷ்பிரயோகம், அச்சுறுத்தும் நடத்தை, அல்லது உங்களுடைய பாதுகாப்பு அல்லது குடும்ப உறுப்பினரின் பாதுகாப்பினைப் பற்றி உங்களுக்கு அச்சத்தினை ஏற்படுத்தும் வகையிலான அடக்கியாளும் அல்லது பயப்பட வைக்கும் நடத்தை ஆகியவற்றை இது உள்ளடக்கலாம்.

**உங்களுக்கு அவசர உதவி தேவைப்பட்டால் அல்லது உங்கள் பாதுகாப்பு உடனடியான ஆபத்தில் இருப்பதாக நீங்கள் உணர்ந்தால், 000 இல் காவல்துறையினரை அழைக்கவும்.**

குடும்ப வன்முறை தொடர்பான சேவைகள் பற்றிய அல்லது அவசரகாலத் தங்குமிடம் பற்றிய தகவல்கள் உங்களுக்குத் தேவைப்பட்டால், வீட்டு வன்முறை நெருக்கீட்டுச் சேவை (Domestic Violence Crisis Service – DVCS) -யை அவர்களது *24 மணிநேர அவசரகாலத் தொலைபேசியில் அழைக்கவும்* **02 6280 0900** அல்லது **www.dvcs.org.au** -இனைப் பார்வையிடவும்.

**உங்களைப் பாதுகாத்துக்கொள்வதற்காக, அவுஸ்திரேலிய தலைநகர்ப் பிரதேச நீதிவான் நீதிமன்றத்தில் (ACT Magistrates Court) நீதிமன்ற உத்தரவு ஒன்றுக்காக நீங்கள் விண்ணப்பிக்கலாம். உத்தரவுகள் உங்கள் பிள்ளைகளையும் உள்ளடக்கலாம்.**

**ஓர் உத்தரவானது, உங்களிடமிருந்து விலகி இருக்கவேண்டும் அல்லது உங்களைத் தொடர்பு கொள்ளாதிருத்தல் வேண்டும் போன்ற நிபந்தனைகளை மற்றைய நபர் மீது (“பிரதிவாதி”) விதிக்கிறது.**

## நான் விண்ணப்பிப்பது எவ்வாறு?

ஒரு விண்ணப்பப் படிவத்தை பூர்த்தி செய்து, அதனை நீதிமன்றத்தில் ஒப்படைக்கவும். படிவங்களை நீங்கள் நீதிமன்றத்தில் அல்லது வலைத்தளத்தில் பெறலாம் **www.courts.act.gov.au/protection**.

## விண்ணப்பிக்க ஏதாவது செலவு ஏற்படுமா?

இல்லை. விண்ணப்பித்தல் இலவசமானது.

## நான் 18 வயதுக்கு உட்பட்டவர்.

நீங்கள் உங்களுடைய சொந்தப் பெயரில் ஓர் உத்தரவுக்காக விண்ணப்பிக்கலாம். நீங்கள் 14 வயதிற்குட்பட்டவராக இருந்து, ஓர் உத்தரவினைப் பெற விரும்பினால், உங்களுக்கு உதவ ஒரு வழக்காடல் பாதுகாவலர் (litigation guardian) நியமிக்கப்பட்டிருக்க வேண்டும். நீங்கள் 14 வயதுக்கு மேற்பட்டவர், ஆனால் 18 வயதிற்கு உட்பட்டவர் எனில், நீங்களும் ஒரு வழக்காடல் பாதுகாவலரைக் கொண்டிருக்க வேண்டியிருக்கலாம்.

ஒரு வழக்காடல் பாதுகாவலர் என்பவர் 18 வயதுக்கு மேற்பட்ட, நீதிமன்றத்தில் உங்களுக்கு உதவ முடியுமான ஒரு நபர் ஆவார் (எடுத்துக்காட்டாக, உங்களுடைய தாய், தந்தை அல்லது நீங்கள் நம்பும் பொறுப்புள்ள வயதுவந்தவர்). உங்களுக்கு ஒரு பெற்றோர் அல்லது பாதுகாவலர் அல்லது நீதிமன்றத்தில் உங்களுக்கு உதவக்கூடிய பிற பொருத்தமான வயதுவந்தவர் இல்லையென்றால், நீங்கள் பொது வழக்கறிஞரை (Public Advocate), **02 6207 0707**. என்ற தொலைபேசி இலக்கத்தில் அழைக்க வேண்டும்.

## எனது விண்ணப்பம் அவசரமானதாகவும், என்னுடைய பாதுகாப்பையிட்டு நான் அஞ்சுவதாகவும் இருப்பின் என்ன செய்வது?

நீங்கள் ஒரு இடைக்கால உத்தரவு (interim order) -க்காக விண்ணப்பிக்கலாம். இடைக்கால உத்தரவு எனப்படுவது ஒரு தற்காலிக உத்தரவாகும். இடைக்கால உத்தரவு ஒன்று வழங்கப்பட்டால், நீதிமன்றத்தால் இறுதி முடிவு எடுக்கப்படும்வரை அது நடப்பில் இருக்கும். முற்பகல் 11.30 மணிக்கு முன்னர் நீங்கள் நீதிமன்றத்தில் ஆஜரானால், உங்களுடைய விண்ணப்பம் அன்றைய தினம் பரிசீலிக்கப்படும். முற்பகல் 11.30 மணியான பிறகும் உங்கள் விண்ணப்பம் கையளிக்கப்படாவிட்டால், அன்றைய தினத்தில் நீதிமன்றத்தில் விசாரிக்கப்படுவதற்குத் தேவையான அளவிற்கு அது அவசரமானதா அல்லது அடுத்துவரும் சாதாரண வேலை நாளில் அதை எடுத்துக் கொள்வதா என்பதை நீதிமன்றம் தீர்மானிக்கும்.

அனைத்து இடைக்கால விண்ணப்பங்களும் ஒரு நீதிமன்ற அறையில் ஒரு பதிவாளர் அல்லது ஒரு நீதிபதி மூலம் விசாரிக்கப்படும். உங்கள் பாதுகாப்பை முன்னிட்டு நீங்கள் ஏன் பயப்படுகிறீர்கள், யாருக்குப் பயப்படுகிறீர்கள் என்பதை நீங்கள் விளக்க வேண்டும். அதற்கான உடனடித் தேவை இருப்பதாகத் திருப்தியடைந்தால், நீதிமன்றம் இடைக்கால உத்தரவு ஒன்றைப் பிறப்பிக்கும். உத்தரவில் பிரதிவாதி பின்பற்றவேண்டிய பல நிபந்தனைகள் இருக்கும்.

காவல்துறையினர் அதன் நகலைப் பிரதிவாதிக்கு வழங்கியபின், இடைக்கால உத்தரவு அமுலுக்கு வருகிறது.

## நீதிமன்றம் இடைக்கால உத்தரவு ஒன்றைப் பிறப்பித்துள்ளது, அடுத்து நடப்பது என்ன?

உங்கள் விடயத்திற்காக நீதிமன்றம் ஒரு கலந்துரையாடல் திகதியை ஒதுக்கும். உங்களுக்கு வழங்கப்பட்ட திகதி மற்றும் நேரத்தில், நீங்கள் குறித்த கலந்தாலோசனைக்கு (conference) சமுகமளிக்க வேண்டும், இல்லையெனில் உங்கள் விண்ணப்பம் தள்ளுபடி செய்யப்படலாம்; அத்துடன் இடைக்கால உத்தரவு இதன் பின்னர் உங்களைப் பாதுகாக்காமல் போகலாம்.

## இடைக்கால உத்தரவுக்கு விண்ணப்பிக்கப்படாவிட்டால் அல்லது அது வழங்கப்படாவிட்டால் என்ன ஆகும்?

உங்கள் விடயத்திற்காக நீதிமன்றம் ஒரு கலந்துரையாடல் திகதியை ஒதுக்கும். உங்களுக்கு வழங்கப்பட்ட திகதி மற்றும் நேரத்தில் குறித்த கலந்துரையாடலில் நீங்கள் கலந்து கொள்ள வேண்டும்.

# ACT MAGISTRATES COURT

## எனது கலந்துரையாடல் தினத்தில் என்ன நடக்கும்?

நீங்கள் பதிவக மேசைக்கு முன் சமுகமளித்து, அங்கு வந்துவிட்டீர்கள் என்பதை அவர்களிடம் தெரிவிக்க வேண்டும். பிரதிவாதி இருக்கும் அதே பகுதியில் நீங்கள் காத்திருக்க விரும்பவில்லை என்றால், தயவுசெய்து அதனை முன்மேசையிலுள்ள ஊழியர்களிடம் சொல்லுங்கள். கலந்துரையாடலை நடத்தும் துணைப்பதிவாளரால் உங்கள் பெயர் அழைக்கப்படும்.

கலந்துரையாடலின் போது நீங்களும், பிரதிவாதியும் வெவ்வேறு அறைகளில் இருப்பீர்கள். உங்களுக்கு ஆதரவாக யாராவது ஒருவரை நீங்கள் உடன் வைத்துக்கொள்ளலாம்.

நீங்களும், பிரதிவாதியும் ஒரு முடிவுக்கு உடன்பட முடியுமா என்று துணைப்பதிவாளர் பார்ப்பார்.

அவுஸ்திரேலியத் தலைநகர்ப் பிராந்தியச் சட்ட உதவி (Legal Aid ACT) -யானது சட்ட ஆலோசனை மூலம் உங்களுக்கு உதவக்கூடிய ஊழியர்களை நீதிமன்றத்தில் கொண்டுள்ளது. வீட்டு வன்முறை நெருக்கீட்டுச் சேவை (Domestic Violence Crisis Service – DVCS) உங்களுக்கு ஆதரவளிக்கக்கூடிய ஊழியர்களை நீதிமன்றத்தில் கொண்டுள்ளது. இந்த அமைப்புகளில் ஏதேனும் ஒன்றில் நீங்கள் உதவிபெற விரும்பினால், தயவுசெய்து விசாரிப்புக் கூண்டில் உள்ள நபரிடமோ அல்லது துணைப்பதிவாளரிடமோ கேளுங்கள்.

## கலந்துரையாடலின் சாத்தியமான பலாபலன்கள்

- இறுதி உத்தரவுகளுக்கு (Final Orders) நீங்களும், பிரதிவாதியும் உடன்படுகிறீர்கள். காவல்துறையினர் உத்தரவுகளை அமுல்படுத்துவர்.
- நீங்களும், பிரதிவாதியும் உங்களுடைய உறுதிமொழிகளை (undertakings) ஒப்புக் கொள்கிறீர்கள். உறுதிமொழிகள் எனப்படுவது நீதிமன்றத்திற்கு ஒருவர் அளிக்கும் முறைசார் வாக்குறுதியாகும். ஓர் உறுதிமொழி மீறப்பட்டால், காவல்துறையினரால் அதை அமுல்படுத்த முடியாது.
- நீங்கள் உடன்படாவிட்டால், நீதிமன்றம் உங்கள் விடயத்தை ஒரு நீதிபதி முன்பாக விசாரணைக்கு அட்டவணைப்படுத்தும்.
- பிரதிவாதி கலந்துரையாடலுக்குச் சமுகமளிக்கவில்லை என்றால், இறுதி உத்தரவை வழங்குவது குறித்து பரிசீலிக்க அதே நாளில் நீதிமன்றத்தில் உங்கள் விடயம் அட்டவணைப்படுத்தப்படலாம்.
- நீங்கள் நீதிமன்றத்திற்குச் சமுகமளிக்கவில்லை என்றால், உங்கள் விண்ணப்பம் தள்ளுபடி செய்யப்படலாம், அத்துடன் எந்தவொரு இடைக்கால உத்தரவும் இதன் பின்னர் உங்களைப் பாதுகாக்காது.
- நீதிமன்றத் திகதி, விண்ணப்பம் மற்றும் எந்தவொரு இடைக்கால உத்தரவு பற்றியும் காவல்துறையினரால் பிரதிவாதிக்கு அறிவிக்க முடியாவிட்டால், நீதிமன்றம் அதற்கு புதியதொரு கலந்துரையாடல் திகதியினை வழங்கும்.

## எனது விண்ணப்பம் விசாரணைக்குச் சென்றால் என்ன ஆகும்?

இறுதி உத்தரவின் அவசியம் பற்றிய ஒரு முடிவை நீதிபதி எடுப்பதற்கு ஏதுவாக நீங்கள் ஆதாரங்களை வழங்க வேண்டும். உங்களுக்கு என்ன நேர்ந்துள்ளது என்பதை மற்றவர்கள் நீதிமன்றத்தில் சொல்ல வேண்டும் என நீங்கள் விரும்பலாம். அவர்கள் சாட்சிகள் என்று அழைக்கப்படுகிறார்கள். உங்களிடம் சாட்சிகள் இருந்தால், விசாரணைக்கு ஒதுக்கப்பட்ட திகதி மற்றும் நேரத்தில் நீதிமன்றத்திற்கு வருமாறு அவர்களை நீங்கள் கேட்க வேண்டும். புகைப்படங்கள் அல்லது செய்திகள் போன்ற உங்கள் வழக்குக்குப் பொருத்தமான பதிவுகள் உங்களிடம் இருந்தால், அவற்றினை நீதிமன்றத்திற்குக் காண்பிக்க நீங்கள் வரும்போது கொண்டுவர வேண்டும்.

பிரதிவாதி தமது விடயத்திலும் அவ்வாறு செய்ய முடியும்.

இச்செயன்முறை பற்றி உங்களுக்கு உறுதியாய்த் தெரியாவிட்டால், சட்ட ஆலோசனையைப் பெறவும்.

## ஓர் உத்தரவு எவ்வளவு காலத்துக்கு நீடிக்கும்?

ஒரு தனியாள் பாதுகாப்பு உத்தரவு (Personal Protection Order) 12 மாதங்கள் வரையும், ஒரு குடும்ப வன்முறை உத்தரவு (Family Violence Order) 24 மாதங்கள் வரையும் நீடிக்கும். உங்கள் இறுதி உத்தரவினை நீடிப்பதற்காக நீங்கள் விண்ணப்பிக்கலாம். இது உத்தரவு காலாவதியாகும் முன்பு செய்யப்பட வேண்டும்.

## உத்தரவினை மாற்ற முடியுமா?

உத்தரவை மாற்ற அல்லது அதனை முடிவுக்குக் கொண்டுவர நீங்கள் விரும்பினால், நீதிமன்றத்தில் விண்ணப்பிக்கலாம்.

## உத்தரவானது மற்ற மாநிலங்களில் செல்லுபடியாகுமா?

அவுஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து முழுவதும் குடும்ப வன்முறை உத்தரவுகளை அமுல்படுத்த முடியும். ஒரு தனிநபர் பாதுகாப்பு உத்தரவினைப் பிற மாநிலங்களில் மற்றும் பிரதேசங்களில் பதிவு செய்வதன் மூலமாக அம் மாநிலங்கள் மற்றும் பிரதேசங்களில் இது அமுல்படுத்தப்படலாம்.

## முக்கியமான தொலைபேசி எண்கள்

**அவசரசேவை**
**000**

**Protection Unit ACT Magistrates Court (அவுஸ்திரேலிய தலைநகர்ப் பிரதேச நீதிவான் நீதிமன்றப் பாதுகாப்புப் பிரிவு)**
**02 6205 4939**

**ACT Policing (அவுஸ்திரேலிய தலைநகர்ப் பிரதேசக் காவல்துறை)**
**131 444**

**Victim Support ACT (அவுஸ்திரேலிய தலைநகர்ப் பிரதேச பாதிப்புற்றோருக்கான ஆதரவுச் சேவை)**
**1800 822 272**

**Legal Aid ACT (அவுஸ்திரேலிய தலைநகர்ப் பிரதேச சட்ட உதவிச் சேவை)**
**02 6207 1874** அல்லது **1300 654 314**

**Domestic Violence Crisis Service – DVCS (வீட்டு வன்முறை நெருக்கீட்டுச் சேவை)**
**02 6280 0900**

## அணுகும் முறை

- உங்களுக்கு மொழிபெயர்ப்பு மற்றும் உரைபெயர்ப்புச் சேவை தேவைப்பட்டால், TIS ஐ **13 14 50** இல் அழைக்கவும் அல்லது **www.tisnational.gov.au** -ஐப் பார்வையிடவும்.
- நீங்கள் காது கேளாதவராக, அல்லது பேச்சு அல்லது செவித்திறன் குறைபாடு உள்ளவராக இருந்து, உங்களுக்கு ஒரு தொலை-எழுத்து அச்சுப்பதிவு (டெலிடைப்ரைட்டர்) சேவை தேவைப்பட்டால், **13 36 77** -ஐ அழைத்து, **02 6205 0000** -ஐக் கேட்கவும்.
- Speak and Listen -ஐப் பயன்படுத்துவோர், **1300 555 727** -ஐ அழைத்து, **02 6205 0000** -ஐக் கேட்கவும்.
- இந்த ஆவணத்தை நீங்கள் பெரிய அச்சில் பெற விரும்பினால், எங்கள் நீதிமன்ற உதவி அதிகாரியை **02 6205 0322** -இல் அழைக்கவும்.

*இந்த ஆவணமானது சட்ட ஆலோசனைக்கான ஒரு மாற்றீடாக இருக்கும் நோக்கத்தைக் கொண்டதன்று. உங்கள் வழக்கை எவ்வாறு தொடர்வீர்கள் அல்லது நடத்துவீர்கள் என்று உங்களுக்கு நிச்சயமற்றிருந்தால், தயவுசெய்து சட்ட ஆலோசனையைப் பெறவும்.*



180787